## ஆசிரியரிடமிருந்து........!



### உண்மையுள்ள மனுஷன்

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்

இன்று உண்மையுள்ளவர்கள் மனுபுத்திரரில் குறைந்திருக்கிறார்கள் (சங்கீதம் 12:1) என்றும் உண்மையுள்ள மனுஷனை கண்டுபிடிப்பவன் யார்? என்றும் வேதம் கூறுகிறது (நீதி.20:6). "உண்மை" ***(faithfulness)*** என்பது கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை குணங்களில் ஒன்றாகும். உண்மையில்லாமல் தேவனுடைய ஆசீர்வாதங்களை நாம் பெற முடியாது. உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் என்று வேதம் கூறுகிறது (நீதி.28:20).

'உண்மை' என்கிற வார்த்தைக்கு எமுனா ***(emunah)*** என்ற எபிரெய பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எமுனா என்பதற்கு நிலைத்திருத்தல், நம்பிக்கைக்குரியவராக இருத்தல், தீர்மானங்களில் உறுதியாக இருத்தல், சொன்ன வாக்கைக் காப்பாற்றுதல் என்று பல அர்த்தங்கள் உண்டு. நம்முடைய தேவன் உண்மையுள்ளவர் (புலம்பல் 3:23). அவர் உண்மையின் வடிவமாகவும் அவருடைய வார்த்தைகள் உண்மையின் வெளிப்பாடுகளாகவும் இருக்கின்றன (1கொரி.10:13; 1தெச.5:23). இந்த உண்மை ***(faithfulness)*** என்கிற கர்த்தருடைய குணாதிசயம் அவருடைய பிள்ளைகளாகிய நமக்குள்ளும் காணப்பட வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நாம் உண்மையாயிருக்க வேண்டிய சில பகுதிகளை இங்கு தியானிப்போம்.

### 1. குடும்பத்திற்கு உண்மையாயிருங்கள்
### Be faithful to your FAMILY

முதலாவது, உங்கள் வாழ்க்கைத் துணையாகிய கணவன்-மனைவிக்கு ***(Companion)*** உண்மையாயிருங்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் திறந்த உள்ளத்தோடு இருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் நல்ல துணையாகவும், பெலனாகவும் இருக்க வேண்டும். உன் உடன்படிக்கையின் மனைவி / கணவனுக்கு துரோகம் பண்ணாதே என்று கர்த்தர் சொல்லுகிறார் (மல்கியா 2:14). பாலியல் வாழ்வில் உண்மையும், உத்தமமும் மிகவும் அவசியம். திருமண வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட எந்த முறையற்ற உறவுக்கும் யோசேப்பை போல் விலகி வாழுங்கள் (ஆதி.39:9). விபச்சாரம், மற்றவருக்கு தெரியாமல் ஆபாச படங்கள் பார்ப்பது, தவறான உறவு போன்றவைகளை தேவன் வெறுக்கிறார்.

இரண்டாவது, உங்கள் பிள்ளைகளிடம் ***(Children)*** உண்மையா யிருங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுங்கள்.

மாதிரியுள்ள தாயாக, தகப்பனாக செயல்படுங்கள். பிள்ளைகளிடம் நல்ல தரமான, நேரம் செலவழியுங்கள். பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள். பிள்ளைகளோடு சேர்ந்தும் ஜெபியுங்கள். இன்று அநேக குடும்பங்களில் பெற்றோர் பிள்ளைகளை நல்ல ஆவிக்குரிய நிலையில் வளர்க்க பிரயாசப்படுவதில்லை. உங்கள் பிள்ளைகளைக் குறித்து தேவன் கணக்கு கேட்பார். அவர்களைப் பரலோகம் கொண்டு சேர்ப்பது பெற்றோராகிய உங்கள் பொறுப்பு. ஏலியைப் போலிராமல் ஆபிரகாமை போலிருங்கள் (வாசியுங்கள் 1 சாமுவேல் 2:12;3:13; ஆதியாகமம் 18:19). அதேப்போல் பிள்ளைகளும் தங்கள் பெற்றோர்களுக்கு எல்லா காரியங்களிலும் உண்மையாக இருக்க வேண்டும் (கொலோ. 3:20).

## 2). பணத்தில் உண்மையாயிருங்கள்
## Be faithful in your FINANCES

அநீதியான உலகப் பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? என்று இயேசு கூறினார் (லூக்கா 16:11). பணத்தில் உண்மையாயிராவிட்டால் தேவன் நமக்கு ஆவிக்குரிய கிருபைகள், வரங்கள், வல்லமைகள், வேத ஞானம், ஜெபத்திற்கு பதில் ஆகியவற்றை தருவது எப்படி?

**பணத்தை சம்பாதிப்பதில் உண்மை :** பணத்தை சம்பாதிப்பதில் தேவனுடைய பிள்ளைகள் உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்க வேண்டும். கடினமாக உழைத்து சம்பாதிக்க வேண்டும். வேதம் சொல்லுகிறது. "வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம், கைப்பாடாய் சேர்க்கிறவனோ விருத்தியடைவான் (நீதிமொழிகள் 13:11)". கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது (நீதிமொழிகள் 11:1; 20:10,23). சுமுத்திரையான நிறைக்கல்லோ அவருக்குப் பிரியம் (ஓசியா 12:7; மீகா 6:11; உபாகமம் 25:15). நேர்மையற்ற குறுக்கு வழியில் பணம் ஈட்ட முயற்சிப்பது, அநியாய வட்டி வாங்குவது, இலஞ்சம் வாங்குவது, திருட்டு போன்ற காரியங்களில் தேவப்பிள்ளைகள் ஈடுபடக்கூடாது (நீதிமொழிகள் 28:8; சங்கீதம் 15:5; நீதிமொழிகள் 15:27;16:8). மேலும் உங்கள் வேலை ஸ்தலத்தில் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு வேலை செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடு மனப்பூர்வமாகவும், உண்மையாகவும் பணி செய்யுங்கள் (எபேசியர் 6:6; கொலோசெயர் 3:22).

**பணத்தை செலவழிப்பதில் உண்மை :** பணக்காரியங்களில் நாம் திறந்த புத்தகமாக *(Transparent)* இருக்க வேண்டும். பணத்தை செலவழிப்பதில் உண்மை தேவை. தேவன் தந்த வருமானத்திற்குள் செலவு செய்ய பிரயாசப்பட வேண்டும். வீண் செலவுகள், கடன் வாங்குதல் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும் (நீதிமொழிகள் 22:7). போதும் என்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் (1 தீமோத்தேயு 6:6; எபிரெயர் 13:5). தேவன் உங்கள் தேவைகள் அனைத்தையும் சந்திப்பார் என்று விசுவாசியுங்கள் (பிலிப்பியர் 4:19). ஆம், உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்.

## 3). உங்கள் திருச்சபைக்கு உண்மையாயிருங்கள்
## Be faithful to your FELLOWSHIP

விசுவாசிகள் அனைவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபைக்கு உண்மையாய் இருக்க வேண்டும். ஸ்தல சபை ஆராதனையில் தவறாமல் நேரத்திற்குச் சென்று

கலந்து கொள்ள வேண்டும் (எபிரெயர் 10:25; அப்.2:42). திருச்சபைப் பணிகளுக்காகவும் தேவ ராஜ்யத்தின் விரிவுக்காகவும் உங்கள் தசமபாகங்கள் மற்றும் காணிக்கைகளை ஒழுங்காக செலுத்த வேண்டும் (மல்.3:10; லேவியராகமம் 27:30; நீதிமொழிகள் 3:9,10). உங்கள் தசமபாகங்களை பல ஊழியங்களுக்கு பிரித்துக் கொடுப்பது முறையானது அல்ல. நீங்கள் அங்கம் வகிக்கும், உங்களை விசாரிக்கும் ஸ்தல சபைக்குத் தான் அது கொடுக்கப்பட வேண்டும். மீதமுள்ள 90% பணத்தில் நீங்கள் பல நல்ல ஆவிக்குரிய ஊழியங்களை தாங்கலாம். சபையில் ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசாதிருங்கள் (யாக்கோபு 4:11). ஒற்றுமையைக் காத்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 4:3).

**உங்கள் ஸ்தல சபை போதகருக்கு உண்மையாயிருங்கள் :** அவருக்கு நீங்கள் கீழ்ப்படிந்து அடங்கி நடக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது (எபிரெயர் 13:17). உங்கள் ஸ்தல சபை போதகரோடு இணைந்து தேவன் உங்கள் சபைக்கு அவர் மூலம் தந்த தரிசனத்தை நிறைவேற்ற உண்மையாயிருங்கள். உங்கள் தாலந்துகளை கண்டுபிடித்து அவைகளை தேவ ராஜ்யத்தின் விரிவுக்காகவும், திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் உண்மையாக பயன்படுத்துங்கள் (மத்.25:14-23).

ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பதிலும், சபை ஊழியங்களில் பங்கு பெறுவதிலும் உண்மையாயிருங்கள். அப்பொழுது ஒரு நாள் இயேசு, 'நல்லது உண்மையும் உத்தமமுமான ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய் உன்னை அநேகத்தின் மேல் அதிகாரியாக வைப்பேன்' என்று உங்களைப் பார்த்துக் கூறி உங்களை ஆசீர்வதிப்பார்.

## 4). உங்கள் விசுவாசத்திற்கு உண்மையாயிருங்கள்
## Be faithful to your FAITH

கடைசி நாட்களில் சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் (1 தீமோ.4:1). ஆகவே பெற்றோரும் ஊழியர்களும் ஆரோக்கியமான வேத சத்தியங்களை பிள்ளைகளுக்கும், குடும்பத்திற்கும், விசுவாசிகளுக்கும் உண்மையாய் போதிக்க வேண்டும் (உபாகமம் 11:20; 2தீமோத்தேயு 2:15). இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் சத்தியத்தில் உறுதியான நம்பிக்கை ***(convictions)*** இல்லாதவர்களாய் இருப்பதை காண்கிறோம். வேதத்தின் முக்கிய அடிப்படை சத்தியங்களை அறியாமலிருக்கிறார்கள்.

நாம் கற்று அறிந்திருக்கிற வேண்டிய சில அடிப்படை வேத சத்தியங்களாவன-வேத வாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டவை, திரித்துவ தேவன், கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பு, இயேசுவின் தெய்வீகம், இயேசுவின் பரிசுத்த வாழ்வு, இயேசுவின் பிராயச்சித்த பலி, இயேசுவின் உயிர்த்தெழுதல், இயேசுவின் இரண்டாம் வருகை, பாவிகளின் நரக தண்டனை, கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் போன்றவை. இந்த அடிப்படை சத்தியங்களை விசுவாசிப்பதில் உண்மையாயிருந்து தேவனுக்கு சாட்சியாயிருக்க வேண்டும். துர் உபதேசங்களுக்கும், கட்டுக்கதை களுக்கும் விலகி சத்தியத்தில் உறுதியாய் நிற்க உண்மையாயிருங்கள் (2தீமோத்தேயு 4:4; கொலோசெயர் 2:4-6). இயேசு சீக்கிரம் வருகிறார்!.

## 5). மரணபரியந்தம் உண்மையாயிருங்கள்
## Be faithful to the FINISH

நீ மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன் என்று இயேசு கூறுகிறார் (வெளி.2:10). நன்றாக ஆரம்பிப்பது முக்கியம். ஆனால் நன்றாக முடிப்பதுதான்அதைவிட அதிக முக்கியம் (2 தீமோ.4:7; பிரசங்கி 7:8). வாழ்க்கையின் கஷ்டமான நேரங்களிலும் காத்திருக்கும் வேளைகளிலும் உண்மையாக இருக்க வேண்டும். யோபு, யோசேப்பு, தாவீது, தானியேல், பவுல் போன்ற தேவ மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் நேரிட்ட ஏமாற்றங்கள் கஷ்டங்கள் தாமதங்கள் அனைத்திலும் கர்த்தரை உறுதியாக பற்றிக்கொண்டு உண்மையாக இருந்தார்கள். கிரேக்க நாட்டில் நடைபெற்ற ஒலிம்பிக்போட்டிகள் விசேஷமானவைகள். அதில் ஓட்டப்பந்தயத்தில் முதலாவது வந்தவர் வெற்றிப் பெற்றவர் அல்ல. ஆனால் தன்னுடைய கையிலுள்ள தீவெட்டியை *(torch)* அணையாமல் கொண்டு வந்து முடிப்பவர்களே வெற்றிப்பெற்றதாக அறிவிக்கப்படுவர். நாமும் நம்முடைய கையிலுள்ள 'உண்மை' என்னும் தீவெட்டியை நம்முடைய மரணம் அல்லது கிறிஸ்துவின் வருகைப் பரியந்தம் அணையாமல் காத்துக் கொள்ள பிரயாசப்படுவோம். கர்த்தர் தாமே நமக்கு ஜீவ கிரீடத்தை தருவாராக!

கடைசியாக சகோதரரே, சின்ன சின்ன காரியங்களில் உண்மையாயிருங்கள் (Be faithful in SMALL things) (தானியேல் 6:4). அந்தரங்க காரியங்களில் உண்மையாயிருங்கள் (Be faithful in SECRET things). ஒருவரும் காணாத நேரத்தில், இடங்களில் நீங்கள் செய்யும் காரியங்களில் கர்த்தருக்கு பயந்து உண்மையாயிருங்கள் (ஆதி.39:9). ஆவிக்குரிய காரியங்களிலும் உண்மையாயிருங்கள் (Be faithful in SACRED things). தேவனோடு அனுதினமும் ஜெபிப்பதிலும், வேதம் வாசிப்பதிலும் உண்மையாயிருங்கள் (தானியேல் 6:10). ஆம், மேலும் வேதம் சொல்லுகிறபடி, இருதயத்தில் உண்மை (நெகேமியா 9:8), கொஞ்சத்தில் உண்மை (லூக்கா 16:10;19:17) மற்றும் எங்கும் உண்மை (எபிரெயர் 3:2). உடையவர்களாய் நீங்கள் இருக்கும்போது தேவன் நிச்சயம் உங்களை பரிபூரணமாக தமது வாக்கின்படி ஆசீர்வதிப்பார் (நீதி.28:20).

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.